23.10.2025

<u>O.S.19/2023       வா.சா.2.சுந்தரம், த/பெ. சின்னப்பயல்</u>

சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

<u>1,2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>

நான் 02.08.1959 அன்று பிறந்தேன். என் மகன் பெயர் கார்த்திக். என் மகனுக்கு 3-ம் பிரதிவாதியுடன் திருமணம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களின் சர்வே எண்கள், பரப்பளவு தெரியாது. எந்த சர்வே எண் நஞ்சை, எந்த சர்வே எண் புஞ்சை என்று சொல்லமுடியாது. எந்த சர்வே எண் சொத்துக்கு எந்த நான்கெல்லை என்று தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்துக்கள் முத்துக்கருப்பனுக்கு அவருடைய தந்தையிடமிருந்து கிடைத்தது. முத்துக்கருப்பனின் தந்தை பெயரில் இருந்த பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. முத்துக்கருப்பனுக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் நான் 5 வயது சிறுவனாக இருந்தபோது நடந்தது. முத்துக்கருப்பனுக்கு யார் திருமணம் செய்து வைத்தார்கள், எந்த முறைப்படி திருமணம் நடந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. முத்துக்கருப்பனுக்கும் வீராயிக்கும் எந்த தேதியில் திருமணம் நடந்தது என்றால் தெரியாது. வழக்கு சொத்துக்களை வாதிகளும், 1,2 பிரதிவாதிகளும் கூட்டாக அனுபவம் செய்து வருவதற்கான ஆவணங்களை நான் பார்த்தேனா என்றால் இல்லை. வாதிகள் பெயரில் தாவா சொத்துக்களுக்கு பட்டா இல்லை என்றால் சரிதான். முத்துக்கருப்பன் இறப்பிற்கு பிறகு பட்டா வீராயி மற்றும் சிதம்பரம் பெயரில் ஏற்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 3-ம் பிரதிவாதி பாண்டிசெல்வி என்பவர் 1-ம் வாதி பிச்சையம்மாளின் பேத்தி என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் பிச்சையம்மாளுக்கும் முத்துக்கருப்பனுக்கும் திருமணம் நடைபெறவில்லை என்றும் பிச்சையம்மாள் என்பவர் முத்துக்கருப்பனின் சட்டப்பூர்வ மனைவி இல்லை என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகளின் தாயார் வீராயி என்பவருக்கும் முத்துக்கருப்பனுக்கும் தான் சட்டப்படியான திருமணம் நடைபெற்றது என்றும் வீராயி மட்டும்தான் முத்துக்கருப்பனின் சட்டப்பூர்வ மனைவி என்றால் சரியல்ல. வாதிகள் மற்றும் 3,4 பிரதிவாதிகள் உட்கூடாக சேர்ந்து இந்த வழக்கை நடத்துகிறார்கள் என்றால் சரிதான் . என் முதல் விசாரணையில் சொ்லியுள்ள விவரங்கள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் வாதிகளுக்கோ, 3,4 பிரதிவாதிகளுக்கோ பாக பாத்தியமோ, கூட்டனுபவமோ இல்லை என்றால் சரியல்ல. வாதிகளும், 3,4 பிரதிவாதிகளும் என் ரத்த உறவுகள் என்பதால் வாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் சில சொத்துக்கள் முத்துக்கருப்பனுக்கு பாத்தியப்பட்டதல்ல என்றால் சரியல்ல.

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க 3, 4 பிரதிவாதிகளின் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது).